## மட்டக்களப்பில் கொள்ளைக் கோஷ்டி
# விடுதலைப்புலிகளிடம் சிக்கியது

மட்டக்களப்பு போரதீவுப் பகுதியில் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டு வந்த கோஷ்டி ஒன்று விடுதலைப்புலிகளிடம் சிக்கியுள்ளது போரதீவுப் பகுதியில் உள்ள வீடுகளில் ஆண்கள் இல்லாத சமயம் பார்த்து இக்கோஷ்டி கொள்ளையில் ஈடுபட்டு வந்தது வீட்டிலுள்ளோரை மிரட்டி நகைகளையும் பணத்தினையும் இவர்கள் கொள்ளையடித்து வந்தனர். விடுதலைப்புலிகளால் தற்போது மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ள இவர்கள விசாரணையின் போது தமது

—04ஆம் பக்கம் பார்க்க

## ரஞ்சன் விஜேரட்னவின் மனைவிக்கு
# 6 இலட்சம் ரூபா நஷ்டஈடு

காலஞ்சென்ற பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் மனைவிக்கு 6 இலட்சம் ரூபா நஷ்டஈடாக அரசு வழங்கியுள்ளது இத்தகவலை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் புனர்வாழ்வு அமைச்சர் தவாரசின வெளியிட்டார் இந்த ஆண்டின் மார்ச்மாத முற்பகுதியில் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ரஞ்சன் விஜேரட்ன கொல்லப்பட்டிருந்தமை தெரிந்ததே. பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கடமை நேரத்தின்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 06 ஒலி 16 பிரஜோற்பத்தி கார்த்திகை 27 : 13 . 12 . 1991 . வெள்ளி.

## மூன்றுமாதச் சம்பளம் கொடுபடவில்லை
# ஊழியர்கள் பெரும் பாதிப்பு

யாழ் நிர்மாணத்துறைத் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போல் தமது சம்பளக் காசோலை கிடைத்தும் பணத்தைப் பெற முடியாது தவிக்கின்றனர். இதுபற்றித் தெரியவருவதாவது: மேற்படி திணைக்களத்தைச் சேர்ந்த 50 ஊழியர்களின் கடந்த மூன்று மாதச் சம்பளத்தையும் பெற்று வருவதற்கு மூன்று உயரதிகாரிகள் திருகோணமலைக்குப் போயிருந்தனர். அங்கு சம்பளக் காசோலையைப் பெற்றுக்கொண்ட பொறுப்பான அதிகாரி ஒருவர் லீவில் கதிர்காமம் சென்றுள்ளாராம் இதனால் இங்குள்ள ஊழியர்கள் அவரது வருகையை எதிர்பார்த்திருப்பதாகத் தெரிய வருகிறது. 14

# மனித உரிமை மீறலுக்கு படையினர்
# காரணம் அல்ல என அரசு மறுப்பு!

## காவலில் உள்ளோரை பார்வையிடும் யோசனை பரிசீலிக்கப்படுமாம்

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்குக் காரணம் அரச படைகளே என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த கருத்தை அரசு ஏற்க மறுத்துள்ளது.

அதேவேளை லண்டன் சர்வதேச மன்னிப்புச்சபை மனித உரிமைகள் தொடர்பாக அரசுக்கு செய்த சில சிபார்சுகளை அரசு ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று குறிப்பிட்டார்,

மன்னிப்புச்சபையின் பல சிபார்சுகளில் 32சிபார்சுகளை அரசாங்கம் ஏற்பதாக தெரிவித்த பிரட்மன் வீரக்கோன் மனித உரிமை மீறலுக்கு அரச படைகளே காரணம் என்ற மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

மன்னிப்புச்சபையில் உள்ள [illegible]வர்களை மனித உரிமை அமைப்புகள் சென்று பார்க்க அரசு அனுமதிக்க வேண்டும் என்ற மன்னிப்புச் சபையின் சிபார்சை அரசு பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளும் எனவும் அப்போது பிரட்மன் குறிப்பிட்டார்.

முன்னர் சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு பயங்கரவாத அமைப்பு அதன் யோசனைகளை அரசு ஏற்கமுடியாது என முன்னாள் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது

## இடம்பெயர்ந்த
## அச்சுவேலிப்பகுதி மக்களுக்கு
## இன்று முதல் நிவாரணம்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த இடைக்காடு (கி சே இல 283); வளலாய் (284 : தம்பாலை கதிரிப்பாய் (282); பத்தமேனி (281); அச்சுவேலி வடக்கு (285); அச்சுவேலி தெற்கு (286); அச்சுவேலி மேற்கு (287); ஆகிய ஏழு கிராமசேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களுக்கு.

— 05ஆம் பக்கம் பார்க்க

## வங்கி முகாமையாளரிடம்
## கோட்டையில் கொள்ளை

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் நேர் முகப் பரீட்சைக்குச் சென்று திரும்புகையில் கோட்டை புகையிரத நிலையத்தில் 6 ஆயிரத்து 500 ரூபா வைக் கொள்ளையடித்து பறித்துள்ளனர்

இக்கோஷ்டியினர் தாங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர் எனத் தெரிவித்ததாகவும்

— 04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் ஷெல் தாக்குதல்
## வீடுபார்க்கச் சென்றவர் காயம்

[illegible]

### இரேக்கத்திலிருந்து

## நாடு கடத்தப்பட்ட 10 பேரும்
## கொழும்பில் விசாரணை

இரேக்கத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட பத்து இலங்கைத் தமிழரும் ஒரு சிங்களப் பெண்ணும் நேற்று கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்தனர்.

போலிவிசாக்களுடன் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு இரேக்க அதிகாரிகளால் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவர்கள் தற்போது கொழும்பில் அதிகாரிகளால் விசாரணைக்குள் படுத்தப்பட்டுள்ளனராம்

## தலைமறைவாக இருந்த
## வெளிநாட்டு ஏஜன்ஸி கைது

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக ஏமாற்றியது தொடர்பாக ஒருவர் மீது நாற்பது முறைப்பாடுகள் கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன கடந்த ஒருவருடமாக தலை [illegible] பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஏற்கனவே இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார் எனவும் பின்னர் தலைமறைவாக இருந்து [illegible]

## பரீட்சைகடமையிலீடுபடுவோருக்கு அதிகரித்த கொடுப்பனவு

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுபவர்களின் கட்டணங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி இணைப்பு அதிகாரிகளுக்கு 150 ரூபாவும், உதவி இணைப்பு அதிகாரிகளுக்கு 100 ரூபாவும், மேற்பார்வையாளர்களுக்கு 125 ரூபாவும், நிரந்தர நோக்கு

— 05 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதி பண்பாட்டுக் கழக தெருக்கூத்து ஆரம்பம்

தீவுப்பகுதி விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினர் தெருக்கூத்து நேற்று முதல் நடாத்தி வருகின்றனர்.

இளைஞர் யுவதிகள் கூடியவளவில் பங்குபற்றும் தெருக்கூத்து நாடகத்தில் போராட்டத்தில் மக்களின் பங்கு, பெண்களின் அடக்கு முறை, போராட்டத்தில் பெண்களின் பங்கு ஆகியவற்றினை விளக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சேவா வனிதா நிதிக்கு கொழும்பு தமிழ் வர்த்தகர் உதவி

சேவா வனிதா நிதிக்கு கொழும்பு வர்த்தகரான சரவணபவன் என்பவர் 31 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

இந்தப்பணம் சேவா வனிதாபிரிவின் வவுனியா பிரதேசப்பகுதித்தலைவியும் வவுனிய பொலிஸ் சுப்பிரின்டனின் மனைவியுமான திருமதி நவரட்ணராஜா மூலமாக சேவா வனிதா இயக்கத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வீடுபார்க்கச் சென்றவர் காயம்

பலாலி - வளலாய் பகுதியில் உள்ள இராணுவத்தினர் நேற்று ஷெல் தாக்குதல்களை நண்பகல் 11 மணி முதல் மாலை வரை விட்டு விட்டு மேற்கொண்டனர்.

இவை அச்சுவேலி தென் மூலைப்பகுதியிலும் தோட்டப் பகுதியிலும் இடைக்காடு மத்திய பகுதியிலும் விழுந்து வெடித்தன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இரு வயோதிபர்கள் படையினரின் பிடியில்

இடைக்காடுப் பகுதியில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருக்கும் வயோதிபர்களின் இருவர் இதுவரையில் விடுவிக்கப்படவில்லை எனத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிவத்தப்பாலம் பகுதியில் இராணுவம் மறைந்திருந்து தாக்கியதில் கப்டன் சத்துருக்கன் (செ. இருவை ராஜா பொத்துவில்) பிரசாத் (க. சங்கர் ஏறாவூர்) ராஜா (பெ. நடராஜா இருதயபுரம்) கண்ணாடி (பொ. வேணுராஜ் திருமலை வீதி) ஆகிய வேங்கைகள் வீரமரணமடைந்துள்ளனர்.

★ ★ ★

இதேவேளை மன்னார் வேப்பங்குளம் பகுதியில்

— 06 ஆம் பக்கம் பார்க்க

கடந்த ஒருவருடமாக தலைமறைவாக இருந்த இவர் அண்மையில் கைது செய்யப் ... வந்தார் எனவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. 08

## காணாமல் போனோர் விவரம் உ. அ. அதிபர்கள் விசாரிப்பர்

அண்மைக் காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இம் மாவட்டத்திலிருந்து காணாமல் போனவர்களுடைய விவரங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு விவரங்களைச் சமர்ப்பிக்கின்ற பொறுப்பு அவ்வப்பகுதிக்குரிய உதவி அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட விருப்பதாகத் தெரிகின்றது.

காணாமல் போனவர்களுடைய குடும்பங்களுக்கு நட்ட ஈடுவழங்குதல் சம்பந்தமான தேவைக்காக மட்டும் விசாரணை மேற்கொண்டு, அவர்கள்பற்றிய விவரங்களை

— 04 ஆம் பக்கம் பார்க்க

1990 ஆண்டு முதல் நாடு முழுவதும்

## ஆயிரம் ஆசிரியர்கள் வரை தற்காலிக வேலை நீக்கம்

1990 ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதிலும் சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் வரை வேலையில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இவர்கள் மீது பல்வேறு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஓர் ஆசிரியர் இடைநிறுத்தம் செய்யப்பட்டால் மூன்று மாதகாலத்தில் அவர் மீது ஒழுங்காற்று விசாரணை நடத்தப்பட்டு பூர்த்தியாக்க

— 07 ஆம் பக்கம் பார்க்க

# யாழ், கிளி. மாவட்டங்களுக்கான பயிர்க் காப்புறுதித்திட்டம் நிறுத்தம்!

## உரம், எரிபொருள் இன்மையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நஷ்டஈடு பெறமுடியாத நிலை

வருடாந்த பெரும்போக நெற்செய்கையின்போது மேற்கொள்ளப்படும் நெற் பயிர்க் காப்புறுதித் திட்டம் யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில் இம்முறை அமுல் செய்யப்படமாட்டாதெனத் தெரிய வருகின்றது.

ஆயிரக்கணக்கான விவசாயிகள் இத் திட்டத்தில் வருடாந்தம் தமது நெற் காணிகளை காப்புறுதி செய்து வருவது வழமை. ஆனால் இந்த நடவடிக்கையினால் இம்முறை பெரும் பாதிப்பை இவர்கள் எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கையினாலும், இரசாயன உரங்களை சரியான முறையில் உபயோகிக்க முடியாமையினாலும், டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் உழவு வேலைகள் பாதிக்கப்பட்டமையாலும் ஏற்பட்ட அழிவுகளால் தமக்குரிய நஷ்டஈட்டைப்பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம்முறை நெற்பயிர் காப்புறுதித் திட்டம் அமுல் செய்யப்படாமற் போனமைக்கு இராணுவ நடவடிக்கையே காரணம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. (04)

# திருவள்ளுவருக்கும் பாரதியாருக்கும் லண்டன் மாநகரில் சிலை!

பிரிட்டனில் திருவள்ளுவருக்கும், பாரதியாருக்கும் சிலைகள் நிறுவப்படவுள்ளன. லண்டன் மாநகரில் இதற்கான இடங்கள் விரைவில் ஒதுக்கப்படவுள்ளன.

பிரிட்டிஷ் அரசு தமிழக உதவியுடன் இந்தச் சிலைகளை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

நேற்று முன்தினம் திருச்சியில் இந்தியாவுக்கான பிரிட்டிஷ் தூதர் இத்தகவலைத் தெரிவித்தார்.

திருவள்ளுவரினதும், சுப்பிரமணிய பாரதியினதும் சிலைகள் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சிற்பிகளால் உருவாக்கப்பட்டு லண்டனுக்குஎடுத்துச் செல்லப்படுமெனவும் அறியப்படுகின்றது.

# நூலகங்களின் அபிவிருத்திக்கு புதியகுழு அமைப்பு!

யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பொது சன நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கென உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக பிரதம நூலகர் எஸ். முருகவேள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

இக்குழு அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில்கூடி நூலக அபிவிருத்தி பற்றிய ஆலோசனை செய்தது. (11)

# பங்களாதேஷ் சிறைகளில் தமிழக மீனவர்கள்!

ஐந்து மாதங்களுக்கு முன் நடுக்கடலில் காணாமற்போன தமிழக மீனவர்கள் சிலர் தற்பொழுது பங்களாதேஷ் சிறைகளில் இருப்பது தெரிய வந்துள்ளது.

திசைமாறிச் சென்ற இவர்களை பங்களாதேஷ் கடற்படை கைது செய்து சிறை வைத்துள்ளமை தற்பொழுது தெரிய வந்துள்ளதாம்.

இதனையடுத்து இவர்களை சென்னைக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## கருத்தரங்கு

யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 'எய்ட்ஸ், நோய்த் தடுப்பு பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18-ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (13)

# வடக்கிற்கான பதிவுத் தபால்களை கொழும்பில் ஏற்க மறுப்பு

வடபகுதிக்கான பதிவுத் தபால்களை ஏற்க கொழும்பிலுள்ள சில தபாலகங்கள் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

கொழும்பு வடக்கில் தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதம தபாலகம் ஒன்றில் 'வடபகுதிக்கான பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா' என 'போர்ட்டில்' எழுதித் தொங்கவிடப்பட்டுள்ளது.

ஆனால் பதிவுத் தபால்களை வடபகுதிக்கு அனுப்புவதற்கு எவ்வித தடையும் இடையாது என தபால் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# உரிமைச்சாசனம் பற்றி மாணவரிடையே கட்டுரைப் போட்டி

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து கல்வி உயர் கல்வி அமைச்சு பாடசாலை மாணவ மாணவியர்களிடையே சிறுவர் உரிமைச் சாசனம்பற்றி நாடளாவிய வகையில் கட்டுரைப்போட்டியொன்றை நடாத்த உள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப் போட்டிக்கான தலைப்புக்கள் கட்டுரைகள்எழுதுவது பற்றிய விபரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. (15)

# பிரிட்டனில் இருந்து செயற்பட இந்தியத் தீவிரவாதிகளுக்குத் தடை!

இந்திய தீவிரவாதிகள் பிரிட்டனில் இருந்து செயற்படாத வகையில் விரைவில் நடவடிக்கைமெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப் புதிய ஒப்பந்தத்தின்படி பிரிட்டனிலிருந்து செயற்படும் இந்திய பிரிவினைவாதப் போராளிகள் கைது செய்யப்பட்டு அவர்களின், நடவடிக்கைகள் முறியடிக்கப்படுவதுடன் உடைமைகளும் பறிமுதல் செய்யப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

இதற்கான புதிய ஒப்பந்தமொன்றை பிரிட்டனும் இந்தியாவும் விரைவில் செய்து கொள்ளவுள்ளன.

# தமிழக அமைச்சர்களுக்கு இப்படியொரு 'திறமை'

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு அன்று தினமொரு 'பட்டம்' அவரது அபிமானிகளினால் வழங்கப்பட்டு வருவது தெரிந்த விடயமே.

இது குறித்து 'ஜுனியர் விகடன்' சஞ்சிகையில் வந்த 'தமாஷ்' இது -

ஜனாதிபதி வெங்கட்ராமன் :- ''தென்னாட்டின் தாரகை, பாரதத்தின் ஜான்ஸிராணி, தமிழகத்தின் விடிவெள்ளி' ன்னுல்லாம் உங்களுக்கு எவ்வளவோ பேருங்க! ...... என்னை மட்டும் எல்லோரும் சுருக்கமாக ஜனாதிபதி ஆர். வி- னுதான் கூப்பிடறாங்க ... எனக்கும் தான் பொருத்தமா ஏதோ ரெண்டு பட்டப் பெயராவது சொல்லுங்களேன் ......''

ஜெயலலிதா :- ''இதையெல்லாம் என் அமைச்சர்கள், எம். எல். ஏக்களைத்தான் கேட்கணும். போட்டி போட்டுக்கிட்டு ... ஒவ்வொருத்தரும் எவ்வளவு 'கெட்டிக்காரர்கள்' தெரியுமா?''

# தொண்டர் ஆசிரிய நியமனத்திற்கு பல போலி விண்ணப்பங்கள்!

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 24 ஆயிரம் விண்ணப்பங்களில் பல தகுதியற்றவை என நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பதாரிகளுக்கு அதிபர்கள் போலியான சான்றிதழ்களை வழங்கியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாம்.

24 ஆயிரம் விண்ணப்பங்களில் 12 ஆயிரம் விண்ணப்பங்கள் நியமனத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டன. எனினும் அவற்றில் பல தகுதியற்றவையெனக் கண்டறியப்பட்டதையடுத்து 6000 பேருக்கு மட்டுமே முதலில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகக் கல்விச் சேவைஆணைக்குழு அறிவித்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்படும்,

# கருணாகரனின் அரங்கிசை


## சிறு விளம்பரம்

### தேவை

விரைவில் செயற்படவிருக்கும் நியாய விலை சந்தைக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. சிறந்த கல்வித் தகைமை உடையோரும், சேவை மனப்பான்மை உள்ளோரும் அண்மையில் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்களோடும், கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரத்துடனும் நேரில் விண்ணப்பிக்க. திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். ஜோ. எகட்டன் செனிக், 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.
12040

### தேவை

ஆண், பெண், சிறுவர் ஆடைகள் தைப்பதில் கைதேர்ந்த அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை நற்சாட்சி அனுபவப் பத்திரங்களுடன்நேரில் விண்ணப்பிக்க. திறமைக்கேற்ற சம்பளம்


# கிராமசேவை அலுவலர்களுக்கு போக்குவரத்துப்படி வழங்க ஆலோசனை!

கிராம சேவை அலுவலர்களுக்கு அதிகரித்த அளவில் ...

சேவை அலுவலர்கள் தற்பொழுது பயிற்சியின் பின் ...

களிடம் ஒப்படைப்பது.

★ மாவட்ட அரசாங்க அதிபர் ...

கிராம சேவை அலுவலர்களுக்கு அதிகரித்த அளவிலான போக்குவரத்துப்படியை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகநேற்று பாராளுமன்றத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 12 ஆயிரம் கிராம சேவை அலுவலர்கள் தற்பொழுது பயிற்சியின் பின் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

★ மாகாணசபைகளின் கடமைகளில் 80 சதவீதத்தை முதலில் உள்ளூராட்சி சபைகளிடம் ஒப்படைப்பது.

★ மாவட்ட அரசாங்க அதிபர் செயலகங்களின் பணிகளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு வழங்குவது

ஆகிய தகவல்களும் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது

## கருணாகரனின் அரங்கிசை

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் சிரேஷ்ட போதனாசிரியர்களுள் ஒருவராகக் கடமை புரிந்து இப்பொழுது சிங்கப்பூர் இந்திய நுண்கலைக்கழகத்தின் சங்கீத ஆசானாக நியமனத்தைப் பெற்றுள்ள பிரபல சங்கீத வித்வான் ஏ.கே. கருணாகரனின் அரங்கிசை நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2 30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்

டன்நேரில் விண்ணப்பிக்க. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் செனித் ஜோ. எசட்டன் 19/3 தொழும்புத்துறை சாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. 12042

# ஸ்பெயின் ஒலிம்பிக்போட்டி மிகப்பழமையான ஸ்ரேடியத்தில்!

அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடாத்துவதற்காக ஸ்பெயின் ஏற்கனவே தயாராகி விட்டது.

1936 இல் ஸ்பெயினில் 'பீப்புள்ஸ் ஒலிம்பிக்ஸ்' நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஸ்ரேடியம் மற்றும் இதர வசதிகள் அழியாமல் காக்கப்பட்டு தற்போது எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளுக்காக நவீன மயப்படுத்தப்பட்டுள்ளன.

கடற்கரையை யொட்டிய ஒரு சிறு குன்றின் உச்சியில் உள்ள பழைய ஸ்ரேடியம் புதுப்பிக்கப்பட்டு அதன் அருகில் 17 ஆயிரம் பேர் அமரக்கூடிய புதிய அரங்கம் கட்டப்பட்டுள்ளது

அங்கு உபயோகமற்றுப்போன பழைய தொழிற்சாலைகளும் களஞ்சியங்களும் அமைந்துள்ள பகுதி முற்றிலுமாக நவீனமயமாக்கப்பட்டு விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான 'ஒலிம்பிக் கிராமம்' உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலிம்பிக் போட்டியைப் பார்வையிட உலகெங்குமிருந்து நான்கு லட்சம்பேர் ஸ்பெயின் வருவார்களெனவும், மூன்றரை பில்லியன் மக்கள் தொலைக்காட்சியில் போட்டிகளைப் பார்வையிடுவார்களெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# 15 இலட்சம் வீட்டுத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்திற்கு மண்வீடுகள்!

யாழ் மாவட்டத்தில் 15 இலட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் தலா 5 மண்வீடுகள் கட்டும் திட்டம் ஒன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒவ்வொரு வீடும் 12 ஆயிரம் ரூபா பெறுமதியுடையதாக அமையும். இவ்வீடுகள் 701 ரூபாவுக்குக் கீழ் மாத வருமானம் பெறுபவர்களுக்கே இடைக்கவுள்ளன. (08)

## தொற்றுநோய்க் கிருமிகளினால் புதிய டாக்டர்களுக்கு ஆபத்து

“நோயாளிகளைப் பரிசோதிக்கும் போதும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போதும் வைத்தியத் துறையில் புதிதாக ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் தொற்று நோய்க்கிருமிகளால் பாதிக்கப்படாத வண்ணம் அவதானமாக இருத்தல் வேண்டும்.”

இவ்வாறு இலங்கை மன்றக் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் எம்.ஜே.எம்.மாறசிங்க கூறினார்.

இந்த விழாவில் 61பேருக்கு M. B. B. S. பட்டம் அளிக்கப்பட்டது அவர்களுக்கே மேற்கூறிய புத்திமதிகளை பேராசிரியர் கூறினார்.

# இலங்கையர்களுக்கு விசா வழங்க

# ஐரோப்பிய தூதரகங்கள் தயக்கம்!

இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கு ஐரோப்பிய நாட்டுத் தூதரகங்கள் பல தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்து விசா பெற்றுச் செல்லும் இலங்கையர் திரும்பி வராமல் அங்கேயே தங்கி விடுவதே இதற்குக் காரணமாம்.

வேறு சில ஆசியநாட்டவர்களும் இவ்வாறு நடந்து கொள்வதாகவும் விசா முடிவடைந்த பிறகும் தமது சொந்தநாடுகளுக்குத் திரும்பாமல் அங்கேயே தங்கிவிடுவதாகவும் இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (22)

## தொழுநோய் சிகிச்சை

தீவகப் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த தொழுநோயாளர்கள் தங்களுக்கான சிகிச்சையை யாழ். போதனா வைத்தியசாலை தோல் சிகிச்சை நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் முற்பகலில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குப் பகுதியில் அகதிகளாகத் தங்கியிருக்கும் தொழுநோயாளர்கள் இதற்கான சிகிச்சையைத் தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையில் ஒவ்வொரு மாதமும் 2 ஆவது திங்கட்கிழமையன்று காலையில் பெற்றுக்கொள்ளலாம். (13)

## கருத்தரங்கு

முதியோர் பற்றிய கருத்தரங்கு ஒன்றை நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. இன்றைய கால கட்டத்தில் முதியோர் இன்றைய நிலை சிறப்பாக இளைப்பாறிய ஓய்வூதியரின் பங்கு பற்றியும் அவர்களின் உடல், உள மனோநிலை பற்றியும் ஆராயப்படும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வணக்கத்துக்குரிய பிதா ஜவசீலன் அடிகளார் பிரதம பேச்சாளராகக் கலந்து உளவியல் ரீதியான கருத்துக்களை ஆற்றுவார்.

வைத்திய கலாநிதி ஏ. உமாகாந்தன் சித்த வைத்திய முறை பற்றியும், முதியோரின் சாதாரண நோய்களும் சிகிச்சை முறைகளும் பற்றியும் ஆய்வுரை நிகழ்த்துவார்.

● விசேட தளபதி தமிழ்ச்செல்வன் அறிக்கை-

# நம் மக்கள் தொடர்ந்தும்

## பொறுமைசாலிகளாக இருக்க மாட்டார்கள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட விசேட தளபதி ப. தமிழ்ச்செல்வன் பத்திரிகை வாயிலாக தமிழீழ மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

இன்று நாம் ஓர் புதிய, மிகவும் அபாயகரமான, பெரிய நெருக்கடிகளைச் சந்தித்தும், எதிர்நோக்கியும் போராட்டப் பாதையிலே முனைப்போடும், உறுதியோடும் சென்றுகொண்டிருக்கின்றோம். இந்தக் காலகட்டத்திலே இந்த மண்ணை நேசித்து, இனத்தை நேசித்து இந்த மண்ணிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற எமது பாசமிகு மக்களோடு கடமையுணர்வுள்ள நெருக்கடிகளை, ஆபத்துக்களை துணைப்போடு எதிர்கொள்வதற்கான அருத்துக்களை பரிமாறவேண்டிய அவசியமான சூழ்நிலையிலுள்ளோம்.

இன்று, ஸ்ரீலங்கா ஜனாதிபதியில் இருந்து அனைத்து ஸ்ரீலங்கா இனவெறியாளர்களும் இராணுவத் தீர்வே வழியெனக் கூறியும், செயற்படுத்தியும் வருகின்றார்கள். இது தனியே எம்மோடான போர்ப்பிரகடனம் மட்டுமல்ல, இந்தத் தமிழீழ மண்ணிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனிற்குமான கடமையை உணர்த்துகின்றதும், எமது மண்ணை, மக்களைப் பாதுகாக்க வேண்டிய இறுதி எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றான் எதிரி.

இன்று எதிரி எமதுமக்களை இந்த மண்ணிலே அடிபணிய வைத்து எம்மை அழிப்பதற்கான பலகொடூரமானமுயற்சிகளை ஆரம்பித்துள்ளான். உலகவிடுதலைப்போராட்டங்களிலே இது மக்கள் கண்டுகொண்ட பாடம்தான் இந்த மண்ணிலே எதிரி அதை விட மோசமான அராஜகங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றான். தடை, உணவு நெருக்கடிகள் போன்றவற்றை ஏற்படுத்தி எமது மக்களைப் பட்டினி போட்டு அடிபணிய வைத்து நீண்ட ஓர் இன அழிவை ஏற்படுத்த முயற்சித்து நிற்கின்றான் எதிரி.

உலக விடுதலைப் போராட்டங்களிலே சுதந்திரம் வேண்டி நின்ற மக்கள் இதற்குத் தகுந்த பதிலடி கொடுத்து விடுதலையை வென்றெடுத்தார்களே தவிர அடிபணிந்து சுதந்திரத்தை, மானத்தை, கௌரவத்தை விட்டுக்கொடுத்ததாக வரலாறு இல்லை. எமது மக்களிடம் அவர்களை விடப் பன்மடங்கு அதிகமான வீரம், உறுதி, சுதந்திர வேட்கை இருக்கின்றது. எனவே பொறுமையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க மாட்டார்கள், கிளர்ந்தெழுவார்கள் என்பதை எதிரி புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று, குடாநாட்டை முழுமையாக ஆக்கிரமிக்க எதிரி திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றான். இதனை எதிர்கொண்டு, உயிரைக் கொடுக்க எமது போராளிகள் வீரத்தோடும், உறுதியோடும் நின்று போராடுகின்றார்கள். உங்களை எங்கேயும் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விடமாட்டேன். இந்த மண்ணிலே நீங்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை புரிந்துகொள்ளுங்கள் என்று எதிரி உணர்த்தி நிற்கின்றான்.

ஆகவே அன்புக்குரிய எமது பாசமிகு மக்களே! நாம் எங்கேயும் ஓட முடியாது. நாம் காலம் காலமாக வாழ்ந்த இந்தப் பாசமிகு பூமி காக்கப்பட வேண்டும். நாம் இங்கே நிம்மதியாகவும், கௌரவமாகவும் வாழவேண்டும். புறப்படுவோம், வாருங்கள் போராடியே சுதந்திரத்தைப் பெறுவதற்கும் எதிரியை விரட்டியடிப்பதற்கும் வாருங்கள் என்பதுதான் நாம் உங்களிற்குக் காட்டி நிற்கும் வாழ்வதற்கான வழியாகும்.

வீரமும், உறுதியும் மிக்க தலைமையைத், தலைவனை உலகமே வியந்து நிற்கும் புரட்சியாளனை இந்தக் காலத்திலே இளைய தலைமுறை பெற்று நிற்கின்றது. எமது இனத்தினுடைய விடுதலைக்கு வழிகாட்டியான அவரோடு ஆயிரக்கணக்கான போராளிகள் புரட்சியாளர்களாக விளைந்து நிற்கின்றார்கள். அவர்களோடு புறப்படுவோம். வீறுகொண்டுவர் நாட்டைக் காக்க புறப்பட்டு விட்டோம் என்ற செய்தி எதிரிகள் செவிக்கெட்டி மிரண்டு ஓடமுன் எதிரியை இங்கேயே சமாதியாக்குவோம். எமது இனத்தின் வீரத்தை, உணர்வை புலப்படுத்துவோம்- வீட்டிற்கு ஒருவரை போர்க்களத்திற்கு அனுப்புவோம் - என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு கப்பல்கள் மோதுண்டு 27000 ஆடுகள் மாண்டன!

துருக்கியின் போஸ்பரஸ் நீரிணையில் 27000 ஆடுகளை ஏற்றிச்சென்ற லெபனான் கப்பலொன்று பிலிப்பைன்ஸ் கொடியுடன் காணப்பட்ட மற்றோர் கப்பலுடன் மோதி மூழ்கியபோது இரு மாலுமிகள் கொல்லப்பட்டனர் 29 மாலுமிகள் கடலிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

கப்பலில் ஏற்றிச்செல்லப்பட்ட 27000 ஆடுகளும் இவ்

3286 தொன் எடையுள்ள 'ரபூலியன்-18' என்ற கப்பலும், 64,747 தொன் எடையுள்ள 'மடோனாலிலி' என்ற கப்பலும் ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் படிஹசலதான் மெஹ்மெத் பாலத்தின் அடியில் மோதுண்டன. (10)

## நவீன ஆஸ்பத்திரி

# தமிழீழப் பொருளாதாரத்தில் கடற்றொழிலின் முக்கியத்துவம்

தமிழீழத்தின் பொருளாதாரம் பற்றிய சிந்தனை எழும் பொழுது கடற்றொழில் வளம் பற்றிய சிந்தனையே இயல்பாக முனைப்பெறுகிறது எனலாம். இலங்கையின் மூன்றில் இரண்டு பங்கு கடற்பகுதி தமிழீழப் பிரதேசத்திலேயே உள்ளது. மேற்கே சுற்பிட்டி தொடக்கம் கிழக்கே பொத்துவில் வரை சுமார் 8000 சதுர மைல் பிரதேசம் இவ்வாறுள்ளது.

தமிழீழக் கடற்பரப்பில் நவீன சாதனங்கள் இன்றியும் ஆழ்கடல் மீன்பிடி இல்லாமலுமே ஆண்டுக்கு 80500 தொன் மீன் பிடிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு ஒரு நபருக்குத் தேவைப்படும் 60 கிராம் நிறைவீதம் தமிழீழ மக்களுக்கு ஆண்டொன்றுக்கு 44000 தொன் மீன் தேவைப்படுகிறது. இது எமது மொத்த உற்பத்தியின் அரைப்பங்காகும். குடாநாட்டில் மட்டும் 49,000 தொன் மீன் பிடிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழீழத்தின் மொத்த உற்பத்தியில் 62 வீதமாகும். இலங்கையின் மொத்த உற்பத்தியில் இது 35 வீதமாகும். இத்தொகை இலங்கையில் உள்ள மீன் பிடித் தொழிலாளர்களில் 16 வீதமான யாழ் குடாநாட்டுத் தொழிலாளர்களால் பிடிக்கப்பட்டதென்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

### கடல் உற்பத்திகள்

கடல் உற்பத்திப் பொருள்களான இறால், ஈச்சிறால், சிங்கிறால், கணவாய், நண்டு, அட்டை, சுறாச்செட்டை, சங்கு என்பன பதனிடப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு சுமார் 465 மில்லியன் (சுமார் ரூபா 46½ கோடி) பெறுமதியான இவ்வகைக் கடலுற்பத்திகள் தமிழீழத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளன.

அறக்குளா, பாரை, இளங்கன், சுறா, விளைமீன், கெத்தலி, சாளை, சூரை போன்ற நல்வகை மீன்கள் எமது கடற்பரப்பிலிருந்து பிடிக்கப்படுகின்றன.

### மீன்பிடி நிலைகளும் முறைகளும்

தமிழீழக் கடல் நீளம் 900 கிலோ மீற்றராகும். இக்கரையை அண்டிக் காணப்படும் 14500 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கண்டமேடையாகும். அடுத்தது ஆழ்கடல் பகுதியாகும். இவற்றில் மீன்பிடித்தொழில் கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி என இரு வகையாகப் பிரித்து ஆராயப்படுகின்றன.

### கரையோர மீன்பிடி

சராசரி கரையிலிருந்து 24 கிலோ மீற்றர் தூரம் வரை அகன்று காணப்படும் கண்டமேடைப்பகுதியில் பிடிபடுவதே கரையோர மீன்பிடியாகும். கண்டமேடை வடபகுதியில் அகன்று இந்தியக் கண்ட மேடையுடன் இணைகிறது.

மன்னாருக்கும் குமரிமுனைக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படும் 'வாட்ஜ் கடற்றாள மேடை', யாழ் குடாநாட்டுக்கு வடகிழக்கே காணப்படும் 'பேதுறு கடற்றாள மேடை' (Pedro Bank) ஏராளமாக மீன் தங்கி நிற்கும் இடங்களாகும்.

கண்டமேடையான பரவைக்கடலில் மீன்குஞ்சு வளர்வதற்குரிய வெப்பநிலையும் உணவும் இருப்பதனால் ஏராளமான மீன்கள் இனப்பெருக்கஞ் செய்கின்றன. கடலில் வாழும் சிற்றுயிர்களில் 90 வீதமானவை இக் கண்டமேடையிலேயே வாழ்வதால் இது சிறந்த மீன்பிடி வலயமாக விளங்குகிறது. விச்சுவலை, கரைவலை மீன்பிடித் தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன.

பாரம்பரிய முறைகளான, தூண்டில்வலை, பறிச்சு வலை, கூடுவைத்தல் ஆகியன நடைமுறையிலுள்ளன. இவற்றில் பிடிபடும் மீன்கள் உள்ளூர் நுகர்வோருக்கே பெரிதும் உபயோகமாகின்றன.

கடற்பகுதியில் 10 கிலோ மீற்றர் தூரம்வரை சென்றால் சாளைவலை, அறக்கொட்டியான் வலை போன்ற தெப்பு வலை முறை மூலம் சாளை, கீரி, அவலை, முள்ளிப்பாரை போன்ற சிறு மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

10 கிலோ மீற்றருக்கு அப்பால் 24 கிலோ மீற்றர் தூரத்துக்குள் உள்ள இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 3½ தொன் நிறையுடைய கண்ணாடி நார் அல்லது மரவள்ளங்கள் மூலம் 4-6 அங்குலம் வரையிலான அகன்ற கண்பாட்டு மிதப்பு வலை மூலம் அறக்குளா, பாரை, சுறா, சூரை என்பன பிடிக்கப்படுகின்றன. 12 36 அங்குலத் துவையுடைய பெரிய கண்பாசுடு வலைகளைக் கடலின் அடியில் விடுவதன் மூலம் பெரிய சுறாக்கள், திருக்கைகள் என்பன பிடிக்கப்படுகின்றன.

இயந்திர வள்ளங்களின் மூலம் தூரக் கடலில் மீன் பிடிக்கும் முறை 25 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு அறிமுகப்ப

யும் ஆய்வுகளை நிகழ்த்து வார்.

கடிதங்கள் போன்றவற்றை ஏற் ... ஒத்தி எமது மக்களைப் பட்

# வொய்ஸ் ஒவ் அமெ.ஒலிபரப்பு நிலையச் சிலாபத்தில் நிறுவ எதிர்ப்பு

சிலாபம் மாவட்டத்திலுள்ள இரணவில கிராமத்தில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலையமும் சர்வதேச ஹெட்கொட்டர் ஒன்றும் அமைக்கப்படுவதற்கு எதிராக 7000 வெண்ணிற ஆடை அணிந்த மக்கள் அமைதியான ஆர்ப்பாட்ட பிரார்த்தனையில் இம்மாத ஆரம்பத்தில் ஈடுபட்டனர். இப்பிரார்த்தனைகளில் சிலாபம் ஆண்டகை அதிவணக்கத்துக்குரிய பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். இவ்விரண்டு சர்வதேச நிறுவனங்களை இரணவில கிராமத்தில் அமைப்பதால் அப் பகுதி வாழ் அப்பாவி மீனவ மக்களின் சமய, கலாசார பாரம்பரியங்கள் கலைமுற்றாக பாதிக்கப்படுமென அதிவணக்கத்துக்குரிய ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

எனவே "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலையம் அமைப்பதற்கு சிறிலங்காவுக்கு உள்ளேயே எதிர்ப்பு கிளம்பியுள்ளது தெரிகிறது.

இதை எதிர்ப்பதற்காகவே சில வாசகங்களையும் இணைப்புகளையும் ஈழத்தமிழர்களின் நலன் கருதிச் செய்யப்பட்ட 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியா சேர்த்துக்கொண்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆட்டம் கண்டு முடிந்து விட்டது.

ஆனால் இந்த எதிர்ப்பு விஷயம் இன்னுமொரு கோணத்திலிருந்து எழுந்திருக்கிறது.

எவ்வாறாயினும் அமெரிக்க ஆதரவு சிறிலங்கா அரசுக்கு இது சங்கடமே. எஸ். ஜீ. எம்.

காட்டப்பட்டனர்.

கப்பலில் ஏற்றிச்செல்லப் பட்ட 27000 ஆடுகளும் இவ் விபத்தில் மாண்டுபோயின

## கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

அகதியாக வந்து தங்கி யிருந்த 12 வயதுடைய சிறுமி ஒருவர் குளிக்கச் சென்ற போது கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

சில்லாலை சாந்தை என்னு மிடத்தைச் சேர்ந்த சாந்த குமாரி என்பவரே இவ்வாறு இறந்தவராவார்.

## அதிகாரிகளுக்கு பெற்றோல்

பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள இணைப்பதி காரிகளுக்கு தமது பரீட்சைக் கடமைகளைத் தங்கு தடை யின்றிச் செய்வதற்காக "பெற்றோல்" விநியோகிக் கப்பட்டது.

கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளின்பேரில் பரீட் சைப் பகுதியின் அனுமதியு டன் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தின் உதவியுடன் அவை கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

(20, 06)

## நவீன ஆஸ்பத்திரி

இந்தியா - புட்டபர்த்தியில் சத்தியசாய் அறக்கட்டளை யின் சார்பில் 250 கோடி ரூபாய் செலவில் நவீன ஆஸ் பத்திரியொன்று கட்டப்பட்டுள்ளது

இங்கு தலா 70 படுக்கைகள் கொண்ட நான்கு அறைகள் அமைந்துள்ளன.

ஏழை மக்களுக்கு இருதய நோய்க்கு சிகிச்சை அளிப்ப தற்கும் இருதய அறுவை சிகிச்சை அளிப்பதற்கும் இங்கு வசதிகள் உள்ளன.

## நியமனம்

பருத்தித்துறை காணிப் பதிவகத்தில் மேலதிக காணிப் பதிவாளராக கே. பவானந் தம் பதிவாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

வவுனியா தேசிய வீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பணி புரிந்த உதவி வேலைப் பரிசோதகர் எஸ். கணநாதன் அண்மையில் யாழ் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத் திற்கு இடமாற்றம் பெற்றுள் ளார். (08)

இயந்திர வள்ளங்களின் மூலம் தூரக்கடல் மீன் பிடி யும் முறை 25 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு அறிமுகப் படுத்தப்பட்டதாகும்

### ஆழ்கடலில் மீன்பிடி

தமிழீழப் பகுதியில் கரையிலிருந்து 370 கி.மீற்றர் வரை யில் பரந்துள்ள கடல் வளத்தைப் பயன்படுத்த எமக்கு உரிமை உண்டு. எனினும் இத் துறையில் எமது ஆய்வும் முயற் சியும் பின்தங்கியே உள்ளது.

மீன் வளத்தைக் கண்டறிதல். பிடித்தவற்றைச் சேமித் தல், குளிரூட்டுதல் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங் கள் என்பவற்றைக்கொண்ட மீன்பிடிக்கப்பல்கள் இந்த ஆழ் கடல் மீன்பிடிக்குத் தேவை. ஜப்பான், தாய்வான், கொரியா போன்ற நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் இங்கு வந்து அறக் குளா, பாரை, சூரை, தூனா, சுறா, கொப்பறா போன்ற பெரிய மீன்களைப் பிடித்துச் செல்கிறார்கள். ஆழ் கடல் மீன்பிடி முயற்சிக்கு பெருந்திட்டமும் முதலீடும் அவசியமா னவையாகும்.

### இறால் உற்பத்தி

இறால் வளர்வதற்கு 'களப்பு' நீர்ப் பரப்பு அவசியமா னதாகும், இது தமிழ்ப் பகுதிகளில் மட்டக்களப்பு, முல்லைத் தீவு, சுண்டிக்குளம், பொன்னாலைப் பகுதிகளில் பரந்து காணப்படுகின்றது. இறால் உற்பத்தியினால் ஆண்டொன் றுக்கு 400 மில்லியன் (ரு 40 கோடி) ரூபாவுக்குமேல் இலாபம் கிடைக்கிறது

### சந்தைப்படுத்தல்

தமிழீழக் கரையோரப் பகுதிகளில் நவீன மீன்பிடித்துறை முக வசதி, குளிர்சாதன சேமிப்பறை, மீன் உலர்த்தும் வசதி போன்றவை இல்லாததால் பிடிபடும் மீன்கள் உடனே சந் தைக்கு வரவேண்டியிருக்கிறது. ஐஸ் இட்டுக் கொழும்புக்கு அனுப்புவது இதன் பொருட்டே நிகழ்கிறது என்று கூறலாம். விற்கப்படாத மீன்கள் உப்பிட்டுக் காயவிட்டும் பின்னரும் கொழும்புக்கே கருவாடாக அனுப்ப வேண்டியிருக்கிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# வைத்தியர்கள் பற்றாக்குறையால்

## யாழ் ஆஸ்பத்திரியில் நோயாளர் பாதிப்பு

யாழ் போதனா வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவில் வைத்தியர்கள் பற்றாக்குறை அதிகரித்துள்ளதால் பெருமளவு நோயாளர்கள் அங்கு வழங்கப்படும் இலக்கத்துண்டினை பெறுவதற்கு காலை 7 மணிக்கு முன்னதாகவேவந்து அமர்ந்திருகின்றனர்.

பெண்கள் பகுதியில் நூறு தொடக்கம் நூற்றி ஐம்பது இலக்கத் துண்டுகளே வழங்கப்படுகின்றன. அதே சமயம் ஆண்கள் பகுதிக்கு காலை நேரத்தில் துண்டுகள் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் 8 மணிக்குப் பின்னர் வரும் நோயாளர்கள் பலர் திரும்பிச் செல்கின்றனர்.

இன்னும் பல நோயாளர்கள் அங்கு வழங்கப்படும் இலக்கத் துண்டுகளைப் பெறுவதற்காக காலை தொடக்கம் நண்பகல் வரை பொறுமையுடன் காத்திருக்கின்றதையும் காணக்கூடியதாகவுள்ளது.

குழந்தைச் சிகிச்சைப் பிரிவில் குழந்தைகளுக்கு இலக்கத்துண்டு இன்றி மருந்தினை பெறமுடிகிறது.

ஊசி மருந்தான பெனிசிலின், பீகோ என்பவற்றை தொடர்ச்சியாக போடுபவர்களுக்கு இலக்கத்துண்டுகள் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர் பிரிவில் முன்னர் எட்டு வைத்தியர்களே கடமையாற்றி வருவது வழக்கம் தற்போது ஒரிரு வைத்தியர்களே காலையும் பிற்பகலும் நோயாளர்களைப் பார்வையிடுகின்றனர்.

பிற்பகல் வழங்கப்படும் இலக்கத்துண்டுகள் இருபாலருக்கும் சேர்த்து நூறு தொடக்கம் நூற்றி ஐம்பது வரையிலேயே வழங்கப்படுவதை பெட்டி நோயாளர்கள் பலர் 12 மணிக்கு வந்து அப்பகுதியில் அமர்ந்திருகின்றனர்.

இதனால் குறிப்பிட்ட அளவு இலக்கத்துண்டுகள் வழங்கப்பட்டதற்குப் பின்னர் வரும் நோயாளர்கள் பெருமளவு ஏமாற்றத்துடன் திரும்புவதைக் காணமுடிகிறது.

நேற்று முன்தினம் முற்பகல் 9-30 மணிவரையில் வெளி நோயாளர் பிரிவில் எந்த ஒரு வைத்தியரும் இல்லாது நோயாளர்கள் மிகக் கஷ்டப்பட்டனர், 07

## சைக்கிளில் செல்வோருக்கு காவல்துறையினர் வேண்டுகோள்

தினமும் பல நூற்றுக்கணக்கான வீதி விபத்துக்களை எமது மக்கள் சந்தித்து வருகின்றனர். கடந்த இரு தினங்களுக்குள் மட்டும் பல பொது மக்கள் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எமது மக்களை இவ்விதமான வீதி விபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் பாரிய பொறுப்பு தமிழீழ காவல்துறையை சார்ந்ததாகும்.

இதற்காக தமிழீழ காவல் துறையின் நகரப்போக்குவரத்தும் பிரிவினர் சில யோசனைகளை மக்கள் முன் வைக்கின்றனர்.

★ நாம் வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் போது பக்கம் பக்கமாக செல்வதைத் தவிர்ப்போம் ஒருவர் பின் ஒருவராக செல்வோம்

★ பாடசாலை மாணவ, மாணவிகள் கைகோர்த்த வண்ணம் ஒருவருடன் இன்னொருவர் செல்வதை தவிர்ப்போம்.

★ பிறேக் இல்லாத துவிச்சக்கர வண்டிகள் ஓட்டுவதை தவிர்ப்போம்.

★ எமது உயரத்திற்கு ஏற்றவாறு துவிச்சக்கர வண்டியின் இருக்கைகளை சரி செய்து பயணத்தை ஆரம்பிப்போம்.

★ ஒழுங்கைகளில் இருந்து பிரதான வீதிக்கு வரும்போது வாகனத்தை நிறுத்தி இருபக்கமும் அவதானித்த பின் பிரதான வீதிக்குள் பிரவேசிப்போம்.

★ பிரதான வீதிகளில் செல்லும்போது நாம் இடது பக்கமாகவோ அல்லது வலது பக்கமாகவோ திரும்பவேண்டுமானால் அதற்குரிய சைகைகளைக் காட்டிய பின்னர் திரும்புவோம்.

★ பாடசாலை முன்பாகவும் வைத்தியசாலைக்கு முன்பாகவும் செல்லும்போது மிகவும் அவதானத்துடனும் மெதுவாகவும் செல்வோம் எனத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கூட யாழ் காங்கேசன் வீதியிலும், பலாலி வீதியிலும் துவிச்சக்கர வண்டிகளில் வந்தவர்கள் லொறியுடனும், மோட்டார் சைக்கிளுடனும் மோதியதன் காரணமாக படுகாயத்துடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இவ்வாறான வீதி விபத்துக்களைத் தவிர்த்து கட்டுப்பாடான ஒழுங்கான விபத்துக்களற்ற வீதி ஒழுங்கு முறைகளை உருவாக்குவதற்காக தமிழீழ காவல் துறை நகரப் போக்குவரத்துப் பிரிவினர் வீதிகளில் கடமைக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உங்கள் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு தமிழீழ காவல் துறையின் பொறுப்பாளர் திரு. நடேசன் அன்புடன் கேட்டுக்கொள்கின்றார்

## சுவிஸ் இளைஞர் திருமணம் சரியான தகவல்

சுவிஸ் இளைஞருக்கு யாழ்ப்பாணத்தில் திருமணம் என்ற தலையங்கத்தில் 22-10-91 முரசொலியில் வெளிவந்த செய்தி தொடர்பாக குறிப்பிட்ட இளைஞர் தான் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்யவில்லை என்றும் தான் மதபோதனைக்காக இங்கு வரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார், தவறுக்கு வருந்துகிறோம்.

## ஜெயலலிதா ஆட்சியில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது

ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்ற குறுகிய காலத்திற்குள்ளே தனக்குள்ள சகல அதிகாரங்களையும் பிரயோகித்து அதன் மூலம் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்''

இவ்வாறு புறன்லைன் பத்திரிகை ஜெயலலிதாவின் ஆட்சி முறையை வர்ணிக்கிறது.

ஜெயலலிதாவின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை பிரசுரித்ததற்காக பொலிஸார் 'தாஜ்ரிஷி' என்னும் பத்திரிகையின் 50:000 பிரதிகளைக் கைப்பற்றியுள்ளனர் இதைவிட அச்சகத்தில் இருந்து 10,000 பிரதிகளையும் கைப்பற்றியுள்ளனர். இதில் திருப்தியடையாத பொலிஸார் சகல கடைகளும் இருந்த இந்தப் பத்திரிகைகளைக் கைப்பற்றியதோடு கடை உரிமையாளர்களை மிரட்டியதாகவும் தெரிகிறது.

இந்தப் பத்திரிகையின் ஆசிரியரும், உரிமையாளரும் முன்னாள் அ. இ. மு. க. எம். பி, வலம்புரி ஜோன் என்பது குறிப்பிடத்தக்கது

நடிகர் ரஜனிகாந்த் நடித்து வெளிவந்த தளபதி போஸ்டர்களையும் புலக்குகளையும் பொலிஸார் கைப்பற்றினர். ரஜனிகாந்த் வருங்கால முதலமைச்சர் எனக் குறிப்பிடும் நிலை வரும் என்பதே காரணமாம்.

இந்தச் செயல்கள் யாவும் சட்டத்திற்கு உட்படாத செயல்கள் என்பது தெளிவு என அப்பத்திரிகை கூறுகிறது

## எம். ஜி. ஆர். பெயரில் பஸ்சேவை

தமிழக முன்னாள் முதல்வர் அமரர் எம் ஜி இராமச்சந்திரன் பெயரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஒன்றை அமைக்கவிருக்கிறது.

காஞ்சிபுரத்தை தலைமை நிலையமாகக் கொண்டு இப்போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படவிருப்பதாக தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் செங்கோட்டையன் அண்மையில் தெரிவித்துள்ளார்.

## தொண்டர்களுக்கு நாளை சான்றிதழ் வழங்கல்

யாழ் மாநகராட்சி மன்றம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது தொண்டர் நிறுவனங்களின் சார்பில் நற்சேவை புரிந்த சகல தொண்டர்களையும் பாராட்டிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

இச்சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை 14ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ் நாவலர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் வி பி பாலசிங்கம் தலைமையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சான்றிதழ்களுக்கு உரித்துடைய சகல தொண்டர்களையும் சமூகம் தருமாறு யாழ் சுகாதார வைத்திய அதிகாரி சகல தொண்டர் ஸ்தாபனங்களையும் கேட்டுக் கொண்டுள்ளார். (14)

## தமிழகப் பத்திரிகைப் பிரதிகள் பங்களூரில் தீக்கிரை!

சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் பிரதிகளை பங்களூருக்கு ஏற்றிச்சென்ற கார் ஒன்று பங்களூர் அருகில் தீக்கிரையாக்கப்பட்டது

பத்திரிகைகளுடன் சேர்ந்து காரும் எரிந்து நாசமானதாக தெரிவிக்கப்படுகிறது

காவிரி நீர் தொடர்பாக தமிழ் நாட்டிற்கும் கர்நாடக மாநிலத்துக்கும் இடையில் தற்போது முறுகல் நிலை தோன்றியுள்ளமை தெரிந்ததே.

## போட்டி தொடர்கிறது

கடந்த புலிகளின் அனுசரணையுடன் ஒழுங்கிணைக்கப்பட்ட விளையாட்டுக்குழுவால் நடாத்தப்பட்டுவந்து கலநிலை காரணமாக சிறிதுகாலம் இடைநிறுத்தப்பட்டிருந்த உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் 11-12-91-ல் ஆரம்பமாகி பாஷையூர் சென் அந்தனீஸ் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது

இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பந்தயத்தில் குருநகர் பாடுமீன் கழக அணி சென்றோக் கழக அணியை ஐந்திற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

சனசமூக நிலையங்களுக்கான இன்னொரு போட்டியில் ஜோன் கெனடி சனசமூக நிலைய அணியை பெனால்டி உதை மூலம் கிடைத்த கோலினால் அடும் போட்டியின்பின் வெற்றியீட்டியது 16

## பசுமாடு திருட்டு

இரவு வேளையில் வீட்டில் கட்டப்பட்டிருந்த 3 500 ரூபா பெறுமதியான நல்லின பசுமாடு ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்ட சம்பவம் வடலியடைப்பில் நிகழ்ந்துள்ளது.

வடலியடைப்பைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி என்பவரின் வீட்டுப் பசுவே இவ்வாறு திருடப் பட்டுள்ளது. (13)

## வளலாய் இடைக்காடு மக்களுக்கு

வளலாய், இடைக்காட்டும் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தபோது தமது உலர் உணவு அட்டைகளைத் தவறவிட்டவர்களுக்கு ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் காரியாலத்தில் வளலாய் கிராமசேவையாளரைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

## கைதியின் மரணம் பொலிஸார் கைது

பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணையில் இருந்தவர் மரணமானது தொடர்பாக ஒருசப் இன்ஸ்பெக்டர் உட்படமூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். 08

## தீவுப்பகுதிக்கு தபால்கள்

யாழ் பிரதம தபாற்கந்தோரில் கடந்த மூன்று மாதங்களாகத் தேங்கி இருந்த

வரீட்சை...

ளர்களுக்கு 100 ரூபாவும், சாதாரண தேசகனுனர்களுக்கு

இரு

தெரியவருகிறது.

வி. கந்தப்பிள்ளை (85) இவரது மனைவி திருமதி

ஜானமணி

உதவி அரச அதிபர்கள் சமர்ப்பிக்கவேண்டு மென்றும் இறப்

கிரையாக்கப்பட்டது
பத்திரிகைகளுடன் சேர்ந்து

## அச்சுவேலிப்பகுதி...

''அ'' உலர் உணவு அட்டைக்கு (57ஆம் கட்டத்துக்கு) உலர் உணவுப்பொருள்கள் இலவசமாக இன்று 13ஆம் திகதி வெள்ளி முதல் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைகளில் மேற்படி நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இப்பிரிவைச் சேர்ந்தோர் கூட்டுறவுச்சங்கத்தால் அறிவிக்கப்படும் கிளைகளிலேயே நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்து வெளியிடங்களில் வசித்து வருபவர்களும் இந்நிவாரணத்தைத் தத்தமது கிளைகளில் பெற உரித்துடையவராவார்.

''உ'' உலர் உ. அட்டைக்கு கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள் வழங்கப்படவுள்ளன என கோப்பாய் உ.அ.அ. S. முருகேசம்பிள்ளை தெரிவித்துள்ளார். (43, 20)06

தற்போது முழுமை நிலை தோன்றியுள்ளமை தெரிந்ததே.

## சேவா

தலைவி திருமதி ஹேமாபிரேமதாசாவிடம் கையளிக்கப்பட்டது.

இதேபோல தென்னிலங்கையில் உள்ள பல தமிழ் வர்த்தகர்கள் பாதுகாப்பு படையினரின் சேவா வனிதா பிரிவுக்கு நிதியுதவி அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## தீவுப்பகுதி...

குவதாக அமைந்துள்ளன.

தெருக்கூத்து நாடகத்தினை நேற்று முதல் தடவையாக நல்லூர் மங்கையற்கரசி பாடசாலையில் நடாத்திக் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நல்லூர் முத்திரைச் சந்தையில் மாலை 6 மணிக்கு இரண்டாவது தடவையாக நடாத்தப்பட்டது.

தெருக்கூத்து நாடகத்தினைப் பார்ப்பதற்கு பெரும் திரளான மக்கள் கூடி நின்றனர். பாடசாலைகள் உட்பட பல இடங்களில் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 07

...வர்களுக்கு 100 ரூபாவும், சாதாரண தொண்டர்களுக்கு 80 ரூபாவும், சிற்றூழியர்களுக்கு 60 ரூபாவும் [illegible]றுக்கு கிடைக்கும்,

## [illegible]கி...

தங்களை சோதனையிட வேண்டுமெனக் கூறி வீட்டு தன்னிடமிருந்த மேற்படி பணத்தைக் கொள்ளையடித்து சென்றுள்ளனராம்

இது பற்றி கோண்டாவில் நிலையத்திற்கு முறைப்பாடு செய்த போதிலும் இதுவரை எதுவித பதிலும் தனக்குக் கிடைக்கவில்லையென மூதாளர் மையப் பொறுப்பாளர் த. சிவரத்தினம் தெரிவித்தார் 08

## இராணுவம்

வீதியால் பார்க்கச்சென்றவர்களில் சின்னத்துரை சந்திரசேகரம் (38 - தேத்தாவடி இடைக்காடு) என்பவர் காவலடைந்துள்ளார்

(20, 43, 07, 06)

## தமிழீழ...

ஒரே நேரத்தில் வலிகாமம் கிழக்கிலிருந்து அதிக மீன் கொழும்புக்குப் போகும்போது தமிழீழ மீன் பிடியாளரின் மீனுக்குக் கொழும்பு வியாபாரி விலை நிர்ணயம் செய்ய வேண்டிய சூழ் நிலை ஏற்படுகிறது. ஆகையால் சந்தைப்படுத்தலின் ஒரு திட்டவட்ட நடைமுறை வகுக்கப்படல் வேண்டும்.

வளரும்

...தெரியவருகிறது.

மி. கந்தப்பிள்ளை (85) இவரது மனைவி திருமதி சின்னத்தங்கம் கந்தப்பிள்ளை (80) ஆகியோரே விடுவிக்கப்படவில்லை எனத்தெரியவருகிறது.

ஏற்கனவே சிலர் பணயக் கைதிகளாக விடுவிக்கப்பட்டதால் இவர்களுக்கு என்ன நடைபெற்றது என இதுவரை தெரியவில்லை என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## வீரமரணம்...

இராணுவத்தினர் வைத்த வாகன கண்ணிவெடியில் சிக்கியதில் மேஜர் தமிழ்ப்புலி அல்லது ரிச்சர்ட் (மு. தர்மராஜா மட்டக்களப்பு) லெப். இனியன் (மு. இராமசாமி பாண்டியன் - தாண்டிக்குளம் வவுனியா), லெப். இஞ்பா (அ. அமுதன் மன்னார்), குமாரன் (த. சுகுமார் பூநகரி) புண்ணியன் அல்லது அல்பேட் (சி இறியடிதேவன் மன்னார்) ஆகிய வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

உதவி அரச அதிபர்கள் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் இறப்புப்பதிவுகள் சம்பந்தமாக எந்த விதமான நடவடிக்கைகளுக்கும் அவை பயன்படுத்தப்படக்கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இதன் மூலம் யாழ் மாவட்டத்தில் காணாமல் போனவர்களுடைய குடும்பங்களுக்கும் நிவாரணங்கள் கிடைக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து மேலும் தெரிய வருகின்றது.

## மட்டக்களப்பில்...

கொள்ளை முயற்சிகளுக்கு இராணுவத்தினரும் உதவியதாக ஒப்புக் கொண்டனர்.

## ரஞ்சன்

போது இறந்தமைக்காக இவ்வளவு பெரிய தொகை அரசினால் நஷ்டஈடாக வழங்கப்பட்டது இதுவே முதற்தடவை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது

கடமையின் போது இறக்கும் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டுத் தொகையை அதிகரிக்கும் பொறுப்பை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவே முன் வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ் பிரதம தபாலகந்தோரில் கடந்த மூன்று மாதங்களாகத் தேங்கிக் கிடந்த தீவுப்பகுதிக்குரிய தபால்கள் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளுக்குரிய தபால் பொதிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க மூலம் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

இவை கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டு பின்னர் இத்தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் என தபாற்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06

## ஆயிரம்...

கப்படவேண்டும்.

இவர்கள் மீது பழிவாங்கல் நடவடிக்கையாகவே இவ்வாறு வேலையில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஆசிரிய தொழிற் சங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனால் இந்த ஆசிரியர்களின் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.

இதேநேரம் ஒரு சில ஆசிரியர்கள் மீது மோசடிக்குற்றச் சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளதாகவும் வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 13.12.1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது